# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 400/மா/2025**

**நாள்: 21.01.2026**

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

(1) செயற்பொறியாளர் (திட்டம்)
மதுரை மாநகராட்சி

(2) உரிமையாளர்
ராகவேந்தர் மருத்துவமனை
மதுரை --- எதிர்மனுதாரர்கள்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 04.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.12.2023 அன்று பெறப்பட்டு, 400/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 04.12.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

“மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு), காமராஜர் சாலை, குருவிக்காரன் சாலை, கதவு எண் 36E-ல் இயங்கி வரும் ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம் ஆறு மாடிகளை கொண்ட கட்டடம் ஆகும். இம்மருத்துவமனை கட்டடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. ராகவேந்தர் மருத்துவமனை கட்டடத்திற்கு நான்குபுறம் இடைவெளி இடம் விடாமலும் (Set Back Spaces) 6 மீட்டர் இடைவெளி இடம் விடாமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இம்மருத்துவமனை கட்டடத்திற்கு வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமல் (Parking Spaces) கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகள், பார்வையாளர்களின் வாகனங்களை ரோட்டில் நிறுத்துவதினால் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதுகுறித்த புகாரினை 10.10.2023 தேதியில் பதிவு தபாலில் (RT475886182IN) உதவி ஆணையர், மண்டலம் 4

(தெற்கு), மதுரை மாநகராட்சி அலுவலகம், மதுரை–9 அவர்களிடம் புகார் தெரிவித்தும் இன்று வரை நடவடிக்கை ஏதும் எடுக்காமல் மேற்படி மருத்துவமனை உரிமையாளர் அவர்களுக்கு சாதகமாக நடந்து கொள்ளும் ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர் அனைத்து நபர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம், பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால், பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2 (8)–ன்படி வருவாய் துறையில் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

எனவே, ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டடம் கட்டப்பட்டும் கட்டடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி இடம் (Set back Space) விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Parking Spaces) இடம் விடாமலும். அரசு துறையினரிடம் உரிய அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாகவும் எதிராகவும் கட்டப்பட்ட ராகவேந்தர் மருத்துவமனை கட்டடத்தை அரசாணை எண் 07 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 217214/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 12.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் மதுரை மாநகராட்சி, செயற்பொறியாளரிடம் (திட்டம்) கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் தன்னுடைய 29.02.2024 நாளிட்ட கடிதம் எண் ஈ4/000232/2024–ல் மனுதாரரின் மனு மீது நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அசல் மனு மண்டலம் 4–ற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ல் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் மதுரை மாநகராட்சி திட்டமிடுநர் அலுவலகத்தில் பெறப்பட்டது என்றும் தெரிவித்து, மேற்படி கடித நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

<u>மதுரை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் நகர திட்டமிடுநருக்கு முகவரியிட்ட கடிதம் நாள் 16.02.2024–ல் அனுப்பியுள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–</u>

“திரு. மயில்சாமி என்பவர் காமராஜர் சாலை, கதவு எண் 36E-ல் உள்ள ராகவேந்திரா மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றும், அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரி 05.10.2023 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் மனு செய்திருந்தார். அதற்கு “மனுதாரார் தகவல் கோரிய மருத்துவமனை கட்டிடம் தொடர்பான கோப்புகள் 14 ஆண்டுகளுக்கு முந்தையதால் அலுவலகத்தில் தேடப்பட்டு வருகிறது என்றும், மருத்துவமனை உரிமையாளரிடம் கட்டிடம் தொடர்பான விவரங்கள் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து 03.11.2023–ல் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

பின்பு அன்னாரின் 29.11.2023–ம் தேதிய மேல்முறையீட்டு மனுவில் கோரியுள்ள விபரங்களுக்கு தகவல் ஏதும் இல்லை என தெரிவித்து 12.12.2023 அன்று பதில் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விபரங்களை தெரிவித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் உதவி பதிவாளர் அவர்களுக்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.''

4. இந்நிலையில், மதுரை மாநகராட்சி செயற்பொறியாளரை (திட்டம்) விரிவான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 16.07.2024 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.

5. மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் தன்னுடைய 04.11.2024 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''ராகவேந்திரா மருத்துவமனை உரிமையாளர் கடிதத்தில் மேற்படி கட்டிடம் 2004–ம் ஆண்டு தரைத்தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் கூடிய கட்டிட அனுமதி பெற்றுள்ளதாகவும், மேலும் கூடுதல் நான்கு தளங்கள் 2008–ல் அனுமதி பெற்று கட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். நாளது தேதி வரை நிலுவையில்லாமல் வரி செலுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். மருத்துவமனை தொடர்பாக திரு. R. மயில்சாமி என்பவர் கொடுத்துள்ள புகார் மனுவில் வாகன நிறுத்துமிடம் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் மருத்துவமனை மேற்குபுறம் தனியாருக்கு சொந்தமான இடத்தை வாடகைக்கு எடுத்து, வாகனம் நிறுத்துமிடமாக பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளார்.

வரைபட அனுமதி விபரம் மற்றும் ஆவணங்கள் கடன் தொகைக்காக வங்கியுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இத்துடன் இணைக்க முடியவில்லை என்றும், மேலும் மருத்துவமனை ஆவணங்கள் அனைத்தும் தனிநபர் ஆவணங்களாக உள்ளதால் தனி நபரின் பாதுகாப்பு கருதி அரசுத் துறை தவிர்த்து தனிநபர் யாருக்கும் வழங்கக்கூடாது என்றும் ஆட்சேபனை தெரிவித்துள்ளார் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 23.12.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. இந்நிலையில், மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் தன்னுடைய 17.12.2025 நாளிட்ட கடிதம் எண் மதிஈ4/013467/2024–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கியுள்ள உத்தரவிற்கிணங்க உள்ளாட்சி அமைப்புகள், தனியார் பட்டா நிலங்களில் கட்டப்பட்டுள்ள விதி மீறல் கட்டிடங்கள், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை மீறி கட்டப்பட்ட வணிக கட்டிடங்கள், பலமாடி கட்டிடங்களின் அங்கீகாரமற்ற கட்டுமானம் மற்றும் தவறான மாற்றங்களை கட்டுப்படுத்தவும், அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றவும், கண்காணிக்கவும், மாண்பமை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்தவும், காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் (ஒருங்கிணைப்பாளர்), நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர், பேரூராட்சி, நிர்வாக பொறியாளர் TANGEDCO ஆகியோரை கொண்ட உயர்மட்ட கண்காணிப்பு குழு

அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள அரசாணை (2D) எண் 15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.03.2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிற்கிணங்க வெளியிடப்பட்ட அரசாணையின்படி உயர்மட்ட காண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களை நியமித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண் Roc. 17665/2022/TP3 நாள் 24.10.2024–ல் ஆணை வரப்பெற்றது. அதன்படி கண்காணிப்புக் குழுக்கூட்டம் நடத்துவதற்கு ஏதுவான நாள் தெரிவிக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ கடிதத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி இக்கடிதம் அனுப்பப்பட்ட நிலையில், ராகவேந்திரா மருத்துவமனை உரிமையாளரின் கடிதத்தின் வாயிலாக மேற்படி கட்டிடத்தின் வரைபட அனுமதி விபரம் மற்றும் ஆவணங்கள் கடன் தொகைக்காக வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், ஆவணங்கள் சமர்ப்பிக்க இயலவில்லை எனவும், மேலும் மருத்துவமனை ஆவணங்கள் அனைத்தும் தனிநபர் ஆவணங்களாக உள்ளதால், தனிநபரின் பாதுகாப்பு கருதி அரசு துறை தவிர்த்து தனிநபர் யாருக்கும் வழங்கக்கூடாது என்றும் ஆட்சேபணை தெரிவித்துள்ளார். எனவே, கட்டிட உரிமையாளர் ஆட்சேபணை தெரிவித்துள்ள விபரம் மதுரை மாநகராட்சி அலுவலக 04.11.2024 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

எனவே மனுதாரர் உரிய ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காததால் விதிமீறல் செய்து கட்டப்பட்டுள்ள ராகவேந்திரா மருத்துவமனை உயர்மட்ட கண்காணிப்புக்குழு கூட்டப் பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது. உயர்மட்ட கண்காணிப்புக் குழு வழிகாட்டுதலின்படி மேற்படி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு), காமராஜர் சாலை, குருவிக்காரன் சாலை, கதவு எண் 36E-ல் இயங்கி வரும் ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக ஆறு மாடிகளை கொண்டு சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் இக்கட்டடத்திற்கு நான்குபுறம் இடைவெளி இடம் விடாமலும் (Set Back Space) 6 மீட்டர் இடைவெளி இடம் விடாமலும் வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் இடவசதி அளிக்காமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளில், பார்வையாளர்களின் வாகனங்களை ரோட்டில் நிறுத்துவதினால் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதுகுறித்த புகாரினை 10.10.2023 தேதியில் புகார் தெரிவித்தும் இன்று வரை நடவடிக்கை ஏதும் எடுக்காமல் மேற்படி மருத்துவமனை உரிமையாளர் அவர்களுக்கு சாதகமாக நடந்து கொள்ளும் மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர் அனைத்து நபர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம், பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால், பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2 (8)–ன்படி வருவாய் துறையில் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

எனவே, சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட ராகவேந்தர் மருத்துவமனை கட்டடத்தை அரசாணை எண் 07 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 217214/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம்,1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்.''

9. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைஅமர்வு வழக்கு எண் W.P.(MD) No.12175 of 2018, W.M.P(MD) No.11079 and 11080 of 2018ல் 6/3/2024 நாளிட்ட ஆணைக்கிற்கிணங்க தனியார் பட்டா நிலங்களில் கட்டுப்பட்டுள்ள விதிமீறல் கட்டிடங்கள், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை மீறி கட்டப்பட்ட வணிக கட்டிங்கள், பலமாடி கட்டிடங்களின் அங்கீகாரமற்ற கட்டுமானம் மற்றும் தவறான மாற்றங்களை கட்டுப்படுத்தவும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்தவும் காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் (ஒருங்கிணைப்பாளர்) நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர் பேரூராட்சி, நிர்வாக பொறியாளர் TANGEDCO ஆகியோரை கொண்ட உயர்மட்ட கண்காணிப்பு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறையின் அரசாணை (2D) எண் 15, நாள் 01.03.2024ல் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிற்கிணங்க வெளியிடப்பட்ட அரசாணையின்படி உயர்மட்ட கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் Roc No. 17665/2022/TP3 நாள் 24.10.2024ல் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்துவதற்கு ஏதுவான நாள் தெரிவிக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட மருத்துவமனைக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி மதுரை மாநகராட்சி மண்டல 4ன் அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு வரைபட அனுமதி மற்றும் ஆவணங்கள் வங்கியில் பெற்ற கடனுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும், தனிநபர் பாதுகாப்பு கருதி அரசுதுறை தவிர்த்து தனிநபர் யாருக்கும் வழங்க கூடாது என்றும் கட்டிட உரிமையாளர் ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

எனவே உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காததால் விதிமீறல் செய்து கட்டப்பட்ட ராகவேந்திரா மருத்துவமனை உயர்மட்ட கண்காணிப்புக்குழு கூட்டப்பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது, உயர்மட்ட கண்காணிப்புக் குழு வழிகாட்டுதலின்படி மேற்படி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

10. மற்றொரு எதிர்மனுதாரரான ராகவேந்தர் மருத்துவமனை சார்பாக நிர்வாக அலுவலர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"1) ராகவேந்திரா மருத்துவமனை கட்டிடத்தில் கீழ் தளம், தரை தளம், முதல் தளம் கட்டுவதற்கு வரைபட அனுமதி எண்.212/2004 நாள் ஜூலை 2004ல் அனுமதி பெறப்பட்டது.

2) மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தில் இரண்டாவது தளம், மூன்றாவது தளம் மற்றும் நான்காவது தளம் கட்டுவதற்கு வரைபட அனுமதி எண்.409/2007 –ல் பெறப்பட்டது.

3) மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தில் ஐந்தாவது மற்றும் ஆறாவது தளம் கட்டுவதற்கு 2009 வருடம் ஆகஸ்ட் மாதம் அனுமதி பெறப்பட்டது.

4) மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தில் எந்தவித விதிமீறலும் இல்லை.

5) மேற்கண்ட மருத்துவமனை அனுமதி பெறப்பட்ட வரைபடத்தின்படி கட்டப்பட்டுள்ளது.

6) மேற்கண்ட மருத்துவமனைக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய வாகனம் நிறுத்துவதற்கு போதிய பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, ராகவேந்திரா மருத்துவமனையின் கட்டிடம் விதிகளுக்கு உட்பட்டும், அனுமதி பெற்ற வரைபடத்தின்படியும், கட்டப்பட்டுள்ளதாலும் மேலும், மனுதாரர் பணம் பறிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு அந்த நோக்கத்துடன் இம்முறை மன்றத்திற்கு பொய்யான உண்மைக்கு புறம்பான புகார் மனுவினை அளித்துள்ளதால், மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

11. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கைகள், செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரரான ராகவேந்தர் மருத்துவமனை சார்பாக நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு), காமராஜர் சாலை, குருவிக்காரன் சாலை, கதவு எண் 36E-ல் இயங்கி வரும் ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக ஆறு மாடிகளை கொண்டு சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால் மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது என்பதும், இக்கட்டடத்திற்கு நான்குபுறம் இடைவெளி இடம் விடாமலும் (Set Back Space) 6 மீட்டர் இடைவெளி இடம்

விடாமலும் வாகனம் நிறுத்துவதற்கு பார்க்கிங் இடவசதி அளிக்காமலும் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் வாகனங்களை ரோட்டில் நிறுத்துவதினால் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது என்பதும், இதுகுறித்து மதுரை மாநகராட்சிக்கு புகார் தெரிவித்தும் நடவடிக்கை ஏதும் எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பதும், ராகவேந்தர் மருத்துவமனை கட்டடம், பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால், பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2 (8)–ன்படி வருவாய் துறையில் உரிமம் பெறாமல் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது என்பதும், அரசாணை எண் 07, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 217214/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம்,1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85 கீழ் Stop work notice/notice calling for approved plan மேற்கண்ட மருத்துவமனை கட்டடதின் உரிமையாளருக்கு அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய Lock and seal and demolition அறிவிப்பினையும் வழங்கி, மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைஅமர்வு வழக்கு எண் W.P.(MD) No.12175 of 2018, W.M.P(MD) No.11079 and 11080 of 2018ல் 01.02.2024 நாளிட்ட ஆணைக்கிற்கிணங்க, காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் (ஒருங்கிணைப்பாளர்) நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர் பேரூராட்சி, நிர்வாக பொறியாளர் TANGEDCO ஆகியோரை கொண்ட உயர்மட்ட கண்காணிப்பு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறையின் அரசாணை (2D) எண் 15, நாள் 01.03.2024ல் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், உயர்மட்ட கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை நாள் 24.10.2024ல் ஆணை வெளியிடப்பட்டது என்பதும், அதன்படி கண்காணிப்புக்குழுக் கூட்டம் நடத்துவதற்கு ஏதுவான நாள் தெரிவிக்கக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு), காமராஜர் சாலை, குருவிக்காரன் சாலை, கதவு எண் 36E-ல் இயங்கி வரும் விதிமீறல் செய்து கட்டப்பட்ட ராகவேந்தர் மருத்துவமனை குறித்து, உயர்மட்ட கண்காணிப்புக்குழு கூட்டப் பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதும், உயர்மட்ட கண்காணிப்புக் குழு வழிகாட்டுதலின்படி மேற்படி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கைகள் மற்றும் செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

ராகவேந்தர் மருத்துவமனை கட்டிடம் விதிகளுக்கு உட்பட்டும், அனுமதி பெற்ற வரைபடத்தின்படி கட்டப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் இம்முறை மன்றத்திற்கு உண்மைக்கு புறம்பான புகார் மனுவினை அளித்துள்ளதாகவும், மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் கோரியிருப்பது மற்றொரு எதிர்மனுதாரரான ராகவேந்தர் மருத்துவமனை நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி நகர திட்டுமிடுநரின் அறிக்கைகள் மற்றும் செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட விதிமீறல் செய்து கட்டப்பட்ட ராகவேந்தர் மருத்துவமனை கட்டிடம் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் கண்காணிப்பக்குழுக் கூட்ட பொருண்மையில் சேர்க்கப்பட்டுள்ளதால், உயர்மட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையின்படி, உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

(3) செயற்பொறியாளர் (திட்டம்)
மதுரை மாநகராட்சி, தல்லாகுளம்,
மதுரை–625 002.

(4) உரிமையாளர்,
ராகவேந்தர் மருத்துவமனை,
கதவு எண்
குருவிக்காரன் சாலை,
மதுரை–625 009.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல் :</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்